# கெகிராவ பிரதேச சபை
## அனுராதபுரம் மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்தோபர் 21 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, கெகிராவ பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கெகிராவ பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கடன் தொகையாகப் பெறப்பட்ட ரூபா 7,900,688 தொகை கடனாகக் கணக்கு வைப்பதற்குப் பதிலாக மூலதன வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) பேக்கரி உற்பத்தி உபகரண இருப்பின் பெறுமதி ரூபா 7,326,000 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நீதிமன்றத் தண்டப்பண வருமானம் மற்றும் பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 2,000,000 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கிடைத்த 03 வருமான விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,096,330 மீளாய்வாண்டிற்குரிய வருமானமாகக் கணக்கு வைக்கப்படாமல் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) சபையினால் நிர்மாணிக்கப்பட்ட கராஜின் ரூபா 1,563,750 தொகையான கிரயம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 47,752,469 கூட்டுத்தொகையான 02 சொத்து விடயங்களையும் ஒரு வருமான விடயத்தையும் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த/மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 37,823,296 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,422,031 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி இல. 10(3) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக உப அலுவலகத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட ரூபா 1,143,726 தொகை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக சபை நிதியத்தில் செலவு வைக்கப்படாமல் சேகரித்தல் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) கடமை கையளித்தல், உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தும் வகையில் வேலைப் பகிர்ந்தளிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 6,136 | 5,486 | 2,023 |
| (ii) | வாடகை | 3,121 | 2,501 | 619 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,301 | 3,125 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 84,426 | 59,044 | 25,382 |

**2.3.2 ஆதனவரி**

ஆதனவரிக்காக ஆதனங்களை மதிப்பீடு செய்தல் நாளதுவரையாக மேற்கொள்ளப்படாமல் 2004 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது.

**2.3.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

**(அ) முத்திரைக் கட்டணம்**

காணிப் பதிவாளர் திணைக்களத்தின் அறிக்கை மற்றும் சபையின் வருமான அறிக்கையின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 2010 ஆம் ஆண்டிற்குரிய கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 3,844,851 ஆக இருந்ததுடன் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்காக கிடைக்க வேண்டிய வருமானம் தீர்மானிக்கப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நீதிமன்ற தண்டப்பணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 53,087,965 ஆக இருந்தது.

**2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட பௌதீக வளங்கள்**

சபைக்குச் சொந்தமான ரூபா 200,000 பெறுமதியான 02 உத்தியோகபூர்வ இல்லங்கள் 07 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 ஒப்பந்த நிருவாகம்**

மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 26,932,266 தொகையான உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட சபையின் நகர மண்டபத்தை நவீனமயப்படுத்துதல் மற்றும் நூலகக் கட்டிடத்தின் நிர்மாணத்திற்காக 2010 ஏப்ரல் 14 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலவினம் ரூபா 25,753,290 ஆக இருந்தது. 2013 மார்ச் 08 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கட்டிடத்தின் சுவருக்கும் கூரைக்குமிடையேயுள்ள இடைவெளி மூடப்படாமையின் காரணமாக கட்டிடத்திற்குள் உயிரினங்கள் உட்பிரவேசித்து சேதங்களை ஏற்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் போடப்பட்ட டொராசோ சுற்றிவர வெடிப்புக்குள்ளாகியிருந்தது.

(ஆ) கட்டிடத்தை நவீன மயப்படுத்தும் போது பாவனைக்கு எடுக்கப்பட்ட பழைய இரும்பு (லின்டல்) தொடர்பாக நிலைமைக் கட்டுப்பாட்டு அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை.

**2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

அரிசி மாவை அண்மித்த பேக்கிரி உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கத்தில் வடமத்திய மாகாண பிரதம செயலாளரும் கெகிராவ பிரதேச சபையும் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் அரிசி மாவை அண்மித்த உற்பத்திச் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2008 ஆண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 2,251,900 செலவினத்திற்குரிய செயற்திட்டத்தை அமுல்படுத்த முடியாமையினால் பயனற்றதாக இருந்தது. இந்த வளங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கான மாற்றுவழிகளை எடுப்பதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினர் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**2.7 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

சபையினால் மீளாய்வாண்டின் போது கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிராமையினால் கழிவுப் பொருட்களை அகற்றுதல் தொடர்பாக திருப்திகரமான நிலைமை அவதானிக்கப்படவில்லை. 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 3,618,563 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட கழிவுப் பொருள் மீள்சுழற்சி நிலையமும் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு
(ஆ) மனிதவள முகாமைத்துவம்
(இ) வருமான நிருவாகம்